Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு *மணி 55 * ஓசை 225 உள்ளூர் - 13.08.2026 வியாழக்கிழமை விலை ரூ.4/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com

Madurai Edition *Vol 55 * Issue 225 வெளியூர் - 14.08.2026 வெள்ளிக்கிழமை Price Rs. 4/- Pages -4 Email: maduraimaninews@gmail.com

வெள்ளி அணிந்தால் அதிர்ஷ்டமா?

குரூப் 2, 2A தேர்வு 821 காலிப்பணியிடங்கள்!

'நாட் ரீச்சபிள்' செந்தில் பாலாஜி?

அதிமுக அதிருப்தி எம்எல்ஏக்கள்! முக்கிய முடிவு?

## தமிழகம் வரும் துணை ஜனாதிபதி சி.பி.ஆர்.!



சென்னை, ஆக. 13–

துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் செங்கல்பட்டு, திருவாரூர் மற்றும் தஞ்சாவூரில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க என 2 நாள் பயணமாக தமிழகம் வருகிறார். டெல்லியில் இருந்து வருகிற 16–ந்தேதி காலை தனிவிமானம் மூலம் சென்னை வருகிறார்.

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்கொளத்தூரில் உள்ள எஸ். ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் 22–வது பட்டமளிப்பு விழாவிலும், அதன்பின்னர் தியாகராயநகரில் உள்ள வாணி மகாலில் நடைபெறும் நாகாலாந்து முன்னாள் கவர்னர் இல.கணேசனின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்ச்சியிலும், தொடர்ந்து டி.ஜி. வைஷ்ணவா கல்லூரியில் நடக்கும் புத்தக வெளியிட்டு விழாவிலும் பங்கேற்கிறார்.

அதன்பின்னர் 17–ந்தேதியன்று சென்னையில் இருந்து தனிவிமானம் மூலம் புறப்பட்டு திருச்சி சென்றடைகிறார். பின்னர் அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் திருவாரூரில் உள்ள தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகம் வருகிறார். பின்னர் அங்கு நடைபெறும் பட் டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு, மாணவ–மாணவிகளுக்கு பட்டங்களை வழங்குகிறார்.

இதையடுத்து தஞ்சையில் உள்ள சாஸ்த்ரா நிகர்நிலை பல்கலைக்கழகத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். இதனை முடித்துவிட்டு திருச்சியில் இருந்து தனி விமானம் மூலம் புறப்பட்டு அன்றைய தினம் இரவு 8.30 மணிக்கு டெல்லி சென்றடைகிறார். துணை ஜனாதிபதி வருகையையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக செய்யப்பட்டு வருகின்றன.

## இளைஞர்களுக்கு பிரதமர் மோடி அறிவுரை!




புதுடெல்லி, ஆக. 13–

முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தின் சுயசரிதை வெளியிடும் விழா டெல்லியில் நடந்தது. 'இந்திய குடியரசின் வெற்றி: என் வாழ்க்கை, என் போராட்டங்கள்' என்ற தலைப்பில் எழுதப்பட்டு இருக்கும் அந்த சுயசரிதையை பிரதமர் மோடி வெளியிட்டார். நிகழ்ச்சியில் பேசும்போது இளைஞர்களுக்கு பல்வேறு அறிவுரைகளை அவர் வழங்கினார். இது தொடர்பாக அவர் கூறியதாவது:–

தலைவர்களின் சுயசரிதைகளை இளைஞர்கள் வாசிக்க வேண்டும். இதன் மூலம் தங்கள் வாழ்வின் ஒரு குறிப்பிட்ட காலத்தில் அவர்கள் பெற்ற அனுபவங்களை இளம் தலைமுறையினர் அறிந்து கொள்ள வாய்ப்பு கிடைக்கும்.

இன்று, 'ரீல்ஸ்'களின் சகாப்தம். சமூக வலைத்தள இன்புளூயன்சர்கள் உங்களை எங்கோ ஈர்க்கிறார்கள். ஆனால் இந்த தலைமுறையில் கூட ரெயில் நிலையங்களில் என்ன எழுதியிருக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். குறுக்குவழி உங்களை முடக்கி விடும்.ராம்நாத் கோவிந்தின் சுயசரிதை இந்திய ஜனநாயகத்தின் ஒரு பாரம்பரிய சின்னமாக மாறும். புதிய தலைமுறை அதிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை ஏராளம் உள்ளது.

எதிர்காலத்தில் அவரை போன்ற இன்னும் பல இளைஞர்கள் நமக்கு தேவை. சூழ்நிலைகளால் தோற்கடிக்கப்படாமல், ஒவ்வொரு சவாலையும் வெல்லும் உறுதியை கொண்டவர்கள் தற்சார்பு இந்தியாவுக்கு வழி வகுப்பார்கள்.இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.இந்த நிகழ்ச்சியில் முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் பேசும் போது, தனது குழந்தைப்பருவ துயரங்கள் உள்ளிட்ட பல்வேறு அனுப வங்களை பகிர்ந்து கொண்டார்.

## 'வெற்றி தமிழ்நாடு' முதலீட்டாளர்கள் மாநாடு:

### ரூ.67,452 கோடி முதலீடு- 97 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!




சென்னை, ஆக. 13–

ரூ.1 லட்சம் கோடி தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில், சென்னையில் வெற்றி தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது.

தமிழகத்தில் நடந்து முடிந்த 17–வது சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்று த.வெ.க. ஆட்சி அமைத்துள்ளது. கடந்த மே 10–ந் தேதி தமிழகத்தின் 12–வது முதல்–அமைச்சராக ஜோசப் விஜய் பொறுப்பேற்றுக்கொண்டார்.

அரசு நடைமுறையில் பல்வேறு சீர்திருத்தங்களை செய்து வரும் த. வெ.க. அரசு, தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் அதிக கவனம் செலுத்தி வருகிறது. ஆட்சி பொறுப்பேற்று இன்றுடன் 96 நாட்கள் நிறைவடையும் நிலையில், வெற்றி தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாடு சென்னையில் நடந்தது.

கிண்டியில் உள்ள ஐ.டி.சி. கிராண்ட் சோழா நட்சத்திர ஓட்டலில் நடைபெற்ற மாநாட்டிற்கு முதல்–அமைச்சர் ஜோசப் விஜய் தலைமை தாங்கினார். இந்த மாநாட்டில், 97 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இதன் மூலம் தமிழ்நாட்டிற்கு ரூ.67,452 கோடி தொழில் முதலீடுகள் ஈர்க்கப்பட உள்ளன. 1 லட்சத்து 6 ஆயிரத்து 998 பேருக்கு புதிய வேலை வாய்ப்புகள் உருவாக இருக்கின்றன. ஏற்கனவே, கடந்த 3 மாதங்களில் போடப்பட்ட தொழில் முதலீடுகளையும் சேர்த்து, த.வெ.க. அரசு பதவியேற்ற 100 நாட்களில் 104 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.

இதன் மூலம் ரூ.1 லட்சத்து 2 ஆயிரத்து 514 கோடி முதலீடுகள் ஈர்க்கப்படும். 1 லட்சத்து 21 ஆயிரத்து 788 பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட உள்ளன.

**எந்தெந்த நிறுவனம் எவ்வளவு முதலீடு**

* தமிழ்நாட்டில் ஹிந்துஜா குழுமம் ரூ.2,500 கோடி முதலீடு செய்கிறது. இதன்மூலம் 500 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.
* அல்ட்ராவயோலெட் நிறுவனம் தமிழ்நாட்டில் ரூ.779 கோடி முதலீடு செய்கிறது. ல்ட்ராவயோலெட் EV ஆலை கிருஷ்ணகிரியில் அமைகிறது. இதனால் 4,000 பேருக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.
* டெய்ம்லர் நிறுவனம் தமிழ்நாட்டில் ரூ.4,000 கோடி முதலீடு செய்கிறது. டெய்ம்லர் நிறுவனத்தின் ஆலை காஞ்சிபுரத்தில் அமைக்கப்பட இருக்கிறது.
* ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனம் ரூ.250 கோடி முதலீடு செய்கிறது
* லூகாஸ் டிவிஎஸ் நிறுவனம் ரூ.2,500 கோடி முதலீடு செய்கிறது
* தமிழ்நாட்டில் ரூ.1,000 கோடி முதலீடு செய்கிறது டைட்டன்
* செயின்ட் கோபைன் நிறுவனம் ரூ.2,000 கோடி முதலீடு செய்கிறது
* ரூ.5,000 கோடி முதலீடு செய்கிறது ஜே.கே. டயர்ஸ் நிறுவனம்
* பீனிக்ஸ் கோத்தாரி நிறுவனம் ரூ.1,000 கோடி முதலீடு

## மக்களவை கூட்டத்தொடர்:

# வந்தே மாதரத்துடன் நிறைவு! எதிர்க்கட்சிகள் அமளி.. ஒத்திவைப்பு!

## 12–ல் 11 மசோதாக்கள் நிறைவேற்றம்!!




புதுடெல்லி, ஆக. 13–

எதிர்க்கட்சிகளின் அமளிக்கு மத்தியில் மக்களவையை காலவரையறையின்றி ஒத்திவைப்பதாக அவைத் தலைவர் ஓம் பிர்லா வியாழக்கிழமை அறிவித்தார். இன்றைய மக்களவை கூட்டத்தொடருக்கு பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா உள்ளிட்டோர் வந்திருந்த நிலையில், அவை கூடியவுடன் பல்வேறு பிரச்னைகளை முன்வைத்து எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அமளியில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, சில நிமிடங்களில் அவை நடவடிக்கையை காலவரையறையின்றி ஒத்திவைப்பதாக மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா தெரிவித்தார்.

தொடர்ந்து, வந்தே மாதரம் பாடல் முழுமையாக பாடப்பட்டு, மழைக்காலக் கூட்டத்தொடர் நிறைவு செய்யப்பட்டது.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் ஜூலை 20 ஆம் தேதி தொடங்கிய நிலையில், முதல் நாளிலிருந்தே பல்வேறு பிரச்னைகள் குறித்து கேள்வியெழுப்பி, எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டனர்.

குறிப்பாக, தில்லியில் மாணவர்கள் போராட்டத்தில் காவல்துறை தாக்குதலுக்கு அனுமதி அளித்தது யார்? எனவும், ராமர் கோயில் நன்கொடை திருட்டு விவகாரம் குறித்தும் கேள்வியெழுப்பி, அமளியில் ஈடுபட்டனர்.

இந்த கூட்டத்தொடரில் உச்ச நீதிமன்ற (நீதிபதிகளின் எண்ணிக்கை) திருத்த மசோதா, பிறப்பு மற்றும் இறப்புப் பதிவு திருத்த மசோதா, தேசிய கௌரவ அவமதிப்புத் தடுப்பு திருத்த மசோதா, பொதுத் தேர்வுகள் (முறையற்ற வழிமுறைகளைத் தடுத்தல்) திருத்த மசோதா உள்பட 12 மசோதாக்கள் மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது. இதில், 11 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன.

## கர்நாடக பந்த் பிசுபிசுப்பு!



பெங்களூர், ஆக. 13–

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்ட வேண்டும் என வலியுறுத்தி கர்நாடகாவில் ஒருநாள் கன்னட அமைப்புகள் பந்த் நடத்துகின்றன. அசம்பாவிதங்களைத் தடுக்க முக்கிய இடங்கள் மற்றும் எல்லைப் பகுதிகளில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

ஒசூரில் இருந்து கர்நாடகாவுக்கும், கர்நாடகாவில் இருந்து தமிழ்நா ட்டுக்கும் பேருந்துகள் இயக்கப்பட்டாலும் குறைவான எண்ணிக்கையிலேயே பயணிகள் உள்ளனர்.

காவிரி மேலாண்மை ஆணையம், கர்நாடக அரசு அடுத்த 15 நாட்களுக்கு வினாடிக்கு 3500 கன அடி நீரை தமிழகத்துக்கு திறந்துவிட வேண்டும் என உத்தரவிட்டது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்து கர்நாடகாவில் பெங்களூர், மைசூர், மங்களூர் ஆகிய இடங்களில் கன்னட அமைப்பினரும், விவசாய சங்கத்தினரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். பெங்களூரில் கன்னட அமைப்பினர் காலி குடங்களுடன் தமிழகத்தை கண்டித்து போராட்டம் நடத்தினர். மண்டியாவில் விவசாயிகள் காவிரி ஆற்றில் இறங்கி போராட்டம் நடத்தினர். இதையடுத்து கன்னட கூட்டமைப்பின் தலைவர் வாட்டாள் நாகராஜ் பந்த் நடத்தப்போவதாக அறிவித்தார்., கர்நாடகாவில் மழை இல்லாததால் அணைகள் வறண்டு காணப்படுகின்றன. ஆனால் காவிரி நீர் ஒழுங்காற்று குழுவும், காவிரி மேலாண்மை ஆணையமும் தமிழகத்திற்கு ஆதரவாக உத்தரவிட்டுள்ளன. இதனை நாங்கள் ஏற்க மாட்டோம். ஒரு சொட்டு நீரைக் கூட தமிழகத்திற்கு திறக்க விட மாட்டோம்.

கர்நாடகாவுக்கு அநீதி ஏற்பட்டதை கண்டித்து ஆகஸ்ட் 13 ஆம் தேதி காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை கர்நாடகா முழுவதும் முழு அடைப்பு போராட்டம் நடத்தப்படும். மாநிலம் முழுவதும் பேருந்துகள், வாடகை ஆட்டோ, டாக்ஸி, பள்ளி, கல்லூரிகள் என எதுவும் இயங்காது. தனியார் நிறுவனங்கள், வணிக வளாகங்கள் மூடப்படும் என அறிவித்தார்.

இந்த பந்த்துக்கு பல கன்னட அமைப்புகள் ஆரம்பத்தில் ஆதரவு தெரிவித்திருந்தாலும், சமீபத்திய மழைப்பொழிவால் அணைகளில் நீர் இருப்பு அதிகரித்ததைக் காரணம் காட்டி பெரும்பாலான அமைப்புகள் ஆதரவை விலக்கியுள்ளன. கர்நாடகா ரக்ஷண வேதிகேயின் பல்வேறு பிரிவுகள், மாநில விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு, தனியார் போக்குவரத்து மற்றும் ஹோட்டல் சங்கங்கள் ஆகியவை பந்த்தில் பங்கேற்க மாட்டோம் எனத் தெரிவித்துள்ளன. கர்நாடகா முதலமைச்சர் டி.கே. சிவக்குமார் உள்ளிட்டோர் இந்த பந்த்தை கைவிட வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

மருத்துவமனைகள், மருந்தகங்கள், வங்கிகள், அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகள், ஹோட்டல்கள், வணிக வளாகங்கள், மளிகைக் கடைகள் ஆகியவை இயங்கும். கேஎஸ்ஆர்டிசி, பிஎம்டிசி பஸ்கள், மெட்ரோ ரயில்கள், ஆட்டோக்கள், வாடகை கார்கள், பள்ளி வாகனங்கள் ஆகிய போக்குவரத்து சேவைகளும் வழக்கம்போல் இயங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், கர்நாடக – தமிழக எல்லையான அத்திப்பள்ளி உள்ளிட்ட பகுதிகளில் பதற்றம் ஏற்பட்டால் கர்நாடகா – தமிழ்நாடு இடையேயான பஸ் சேவைகளில் தற்காலிக தடை ஏற்பட வாய்ப்புள்ளது. அசம்பாவிதங்களைத் தடுக்க முக்கிய இடங்கள் மற்றும் எல்லைப் பகுதிகளில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

6 மணி முதல் பந்த் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது ஒசூரில் இருந்து கர்நாடகாவுக்கும், கர்நாடகாவில் இருந்து தமிழ்நாட்டுக்கும் பேருந்துகள் இயக்கப்பட்டாலும் குறைவான எண்ணிக்கையிலேயே பயணிகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தலையங்கம்
மதுரை மணி
வியாழக்கிழமை 13.08.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆடி மாதம் 28-ம் தேதி

# கடன் இல்லாமல் குடும்பம் நடத்த முடியாத நிலை!




விலைவாசி உயர்வு, வருமான வளர்ச்சி மந்தம், வேலைவாய்ப்பு சிக்கல் உள்ளிட்ட காரணங்களால் இந்திய குடும்பங்களின் கடன் சுமை தொடர்ந்து அதிகரித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடும்போது, குடும்பங்களின் மொத்தக் கடன் 45.5 சதவீதமாகஉயர்ந்துள்ளது. 5 ஆண்டுகளுக்கு முன்பு இது 35 சதவீதமாக இருந்தது.


இதில் கவலைக்குரிய அம்சமாக, வீட்டுக் கடன் அல்லாத கடன்களின் பங்கு 58.4 சதவீதமாக உள்ளது. தனிநபர் கடன், கிரெடிட் கார்டு கடன், செல்போன், லேப்டாப் உள்ளிட்ட நுகர்வுப் பொருட்களுக்கான கடன்கள் இதில் அடங்கும். 2019–20ல் இந்தப் பங்கு 50 சதவீதமாக இருந்தது.

அன்றாடத் தேவைகள் மற்றும் சிறு பொருட்களுக்குக் கூட ஆன்லைன் தளங்களில் EMI வசதி கிடைப்பதால், வருமானம் போதாத நேரத்திலும் கடன் மூலம் செலவுகளை சமாளிக்கும் போக்கு அதிகரித்துள்ளது.

எனினும், வங்கிகளின் வாராக் கடன் 2028 வரை 2 சதவீதத்துக்குள் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளதால், தற்போதைய நிலை குறித்து வங்கித்துறை பெரிய அச்சம் கொள்ளவில்லை.

அதேநேரம், கடன் தொடர்ந்து அதிகரித்து, அதை திருப்பிச் செலுத்தும் திறன் குறைந்தால் எதிர்காலத்தில் குடும்பங்களுக்கும் வங்கிகளுக்கும் பெரும் பாதிப்பு ஏற்படலாம் என எச்சரிக்கை எழுந்துள்ளது.

# மீனாட்சி அம்மன் கோயில் நில விவகாரம்: துணை ஆட்சியர் பணியிடை நீக்கம்!




மதுரை, ஆக. 13–

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் சொந்தமான நிலம் தொடர்பான மோசடி வழக்கில், துணை ஆட்சியர் அன்பழகன் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். நில விவகாரம் தொடர்பான விசாரணையில் அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், இந்த நில மோசடி விவகாரத்தில் தொடர்புடையவர்கள் குறித்து அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். கோயில் நிலங்கள் பாதுகாப்பு மற்றும் ஆவணங்கள் தொடர்பாகவும் அதிகாரிகள் கவனம் செலுத்தி வருகின்றனர்.இந்த விவகாரம் மதுரை வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## பொறியியல் / பொறியியல் அல்லாத தொழிற்பிரிவு மற்றும் 4.0 நவீன தொழிற்நுட்ப பயிற்சிக்கு விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்; கலெக்டர் தகவல்!

தேனி, ஆக. 13–

மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்ததாவது,

தேனி மாவட்டத்தில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 2026ஆம் ஆண்டிற்கான பொறியியல் / பொறியியல் அல்லாத தொழிற்பிரிவு மற்றும் 4.0 நவீன தொழிற்நுட்ப பயிற்சிக்கு விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். இவ்விண்ணப்பங்களை சமர்பிக்க 14.08.2026 வரை காலஅவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

பத்தாம் வகுப்பு மற்றும் அதற்குமேல் தேர்ச்சி பெற்றவர்கள் உரிய சான்றிதழ்களுடன் நேரடியாக அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களைத் தொடர்புகொண்டு தொழிற்பிரிவில் சேர்ந்து கொள்ளலாம். விண்ணப்பக் கட்டணத் தொகை ரூ.50/– ஐ Debit Card / Credit Card / Net banking / UPI (Gpay, Pho–nePe, etc. ) வாயிலாக செலுத்தலாம். மேலும், சேர்க்கை தொடர்பான ஏதேனும் விபரங்களுக்கு அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், தேனி prlgititheni@gmail.com / 9499055765, அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், போடிநாயக்கனூர் govt–bodiiti@gmail.com / 9499055768, அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், ஆண்டிப்பட்டி (மகளிர்) gitiwapt@gmail.com / 9499055770 ஆகிய மின்னஞ்சல் முகவரி அல்லது தொலைப்பேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டு, தெரிந்துக்கொள்ளலாம். எனவே தகுதியுள்ள விண்ணப்பத்தாரர்கள் இதனை பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா.வைத்திநாதன் தெரிவித்துள்ளார்.

# இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் 9 பேர் சிறைபிடிப்பு!



ராமேசுவரம், ஆக. 13–

ராமேசுவரத்தில் இருந்து நேற்று 400–க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் 2 ஆயிரத்துக்கும் அதிகமான மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர். இதில் விசைப்படகு ஒன்றில் 9 மீனவர்கள் சென்று இருந்தனர்.


நடுக்கடலில் மீன்பிடித்தபோது 2 ரோந்து கப்பல்களில் இலங்கை கடற்படையினர் அங்கு வந்தனர். விசைப்படகையும், அதில் இருந்த 9 மீனவர்களையும் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி சிறைப்பிடித்து கைது செய்தனர். மன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர்.

5 நாட்களுக்கு முன்பு ராமேசுவரத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற விசைப்படகின் என்ஜின் பழுதாகி, இலங்கை பகுதியில் கரை ஒதுங்கியதால் 11 மீனவர்கள் கைது செய்யப்பட்டு அந்நாட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இந்தநிலையில் மீண்டும் 9 மீனவர்களை இலங்கை கடற்படை அத்துமீறி கைது செய்தது ராமேசுவரம் மீனவர்களை வேதனை அடையச்செய்துள்ளது.

# செங்கோட்டை கார் குண்டு வெடிப்பு அல் கொய்தாவின் துணை அமைப்பே காரணம்: ஐநா அறிவிப்பு!

டெல்லி, ஆக. 13–

டெல்லியில் கடந்தாண்டு நவம்பர் மாதத்தில் செங்கோட்டை அருகே நடந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் 11 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக, 11 குற்றவாளிகளுக்கு எதிராக 7,500 குற்றப்பத்திரிகையை தேசிய புலனாய்வு முகமை தாக்கல் செய்துள்ளது. இந்தக் குற்றப்பத்திரிகையை ஆக. 27–ல் ரவுஸ் அவென்யூ நீதிமன்றம் விசாரிக்கவுள்ளது. மேலும், அரசு தரப்பின் புகார் மனு, ஆயிரக்கணக்கான



பக்கங்களுடன் இருப்பதுடன், 580–க்கும் மேற்பட்ட சாட்சிகளையும் மேற்கோள் காட்டியுள்ளது. இந்த நிலையில், செங்கோட்டை அருகே குண்டுவெடிப்பு சம்பவத்துக்கு அல்–கொய்தா அமைப்பே காரணம் என ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளதாக ஐ.நா. பகுப்பாய்வு ஆதரவு மற்றும் தடைகள் கண்காணிப்புக் குழுவின் அறிக்கை தெரிவித்துள்ளது. அதுமட்டுமின்றி, வங்கதேசத்திலும் தங்களின் குழுக்களை நிறுவுவதற்காக அந்நாட்டையும் அல்–கொய்தா சுரண்டுவதாகவும் ஐ.நா. கூறியுள்ளது.

# சுதந்திர தின விழாவையொட்டி, முக்கிய ரெயில் நிலையங்களில் பலத்த பாதுகாப்பு!



திருச்சி, ஆக. 13–

சுதந்திரதின விழா ஆக. 15–ல் நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி விழா ஏற்பாடுகள் தற்போது மும்முரமாக நடைபெற்று வருகிறது. இந்தநிலையில் சுதந்திர தினத்தை சீர்குலைக் கும் சதி செயலில் மர்ம ஆசாமிகள் ஈடுபடுவதை தடுக்கும் பொருட்டு தமிழகத்தின் முக்கிய ரெயில் நிலையங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

அந்த வகையில், திருச்சி ஜங்ஷன் ரெயில் நிலையத்தில் ரெயில்வே பாதுகாப்பு படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். பயணிகளின் உடைமைகள் தீவிர சோதனைக்கு பிறகே அனுமதிக்கப்படுகிறது. ரெயில்வே பாதுகாப்பு படையினர் மற்றும் வெடிகுண்டு தடுப்புபிரிவு போலீசார் ரெயில் நிலைய வளாகம், வாகன நிறுத்துமிடம் உள்பட பல்வேறு இடங்களிலும் தீவிர சோதனை நடத்தி வருகிறார்கள். போலீஸ் மோப்பநாய் உதவியுடன் பயணிகளின் உடைமைகள் சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், திருச்சி வழியாக செல்லும் அனைத்து ரெயில்களிலும் ரெயில்வே பாதுகாப்பு படையினர் சோதனை நடத்தினார்கள். இதேபோல் பஸ் நிலையம் மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்களிலும் போலீசார் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள்.

# வார விடுமுறை: தமிழகம் முழுவதும் 2,120 சிறப்பு பஸ்கள் இயக்கம்!




சென்னை, ஆக. 13–

வார விடுமுறை நாட்களை முன்னிட்டு, பயணிகளின் வசதிக்காகச் சென்னையில் உள்ள முக்கியப் பேருந்து முனையங்கள் மற்றும் பிற நகரங்களில் இருந்து சிறப்புப் பேருந்துகளை இயக்க தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக்கழகம் திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக அரசு விரைவுப் போக்குவரத்துக்கழக மேலாண் இயக்குனர் குணசேகரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் பின்வருமாறு:–

கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு நாளை (வெள்ளிக்கிழமை) 505 சிறப்புப் பேருந்துகள், 15–ந் தேதி (சனிக்கிழமை) 570 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, ஒசூர் மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களுக்கு நாளை (வெள்ளிக்கிழமை) 110 சிறப்புப் பேருந்துகள், 15–ந் தேதி (சனிக்கிழமை) 110 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

மாதவரத்திலிருந்து கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, போளூர் மற்றும் புதுச்சேரி ஆகிய இடங்களுக்கு 14 மற்றும் 15–ந் தேதிகளில் நாள் ஒன்றுக்கு தலா 80 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படவுள்ளன.

வெளி மாவட்டங்கள் பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய முக்கிய நகரங்களில் இருந்து பல்வேறு ஊர்களுக்கு 200 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படவுள்ளன.

வார விடுமுறை முடிந்து சொந்த ஊர்களில் இருந்து பயணிகள் சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக, 16–ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) தேவைகேற்ப பல்வேறு இடங்களில் இருந்து 465 சிறப்புப் பேருந்துகள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

# டாடா சன்ஸ்: அடுத்த தலைவர் யார்?




புதுடெல்லி, ஆக. 13–

டாடா சன்ஸ் தலைவர் என். சந்திரசேகரன், 2027 பிப்ரவரி 20–ல் தனது பதவிக்காலம் முடிந்ததும் தொடர விருப்பமில்லை என தெரிவித்துள்ளார். இதையடுத்து அடுத்த தலைவரை தேர்வு செய்யும் பணியை டாடா சன்ஸ் தொடங்கியுள்ளது.

தற்போது முக்கியப் போட்டியாளராக டாடா ஸ்டீல் CEO மற்றும் நிர்வாக இயக்குநர் டி.வி. நரேந்திரன் பெயர் பேசப்படுகிறது. 1988–ல் டாடா குழுமத்தில் இணைந்த இவர், 35 ஆண்டுகளுக்கும் மேலான தொழில்துறை அனுபவம் கொண்டவர். திருச்சி NIT–யில் பொறியியல் மற்றும் IIM கொல்கத்தாவில் MBA முடித்துள்ளார்.

சந்திரசேகரனுக்கு அடுத்து நரேந்திரனா? என்ற எதிர்பார்ப்பு டாடா குழும வட்டாரங்களில் எழுந்துள்ளது.

# ரூ.86,917 கோடி கேட்பாரற்று!




புதுடெல்லி, ஆக. 13–

வங்கிகளில் உரிமை கோரப்படாமல் இருக்கும் பணம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 2026 ஜூன் 30 நிலவரப்படி, RBI–யின் DEA Fund–ல் ரூ.86,917 கோடி இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஒரு சேமிப்பு அல்லது நடப்பு கணக்கில் 2 ஆண்டுகள் பரிவர்த்தனை இல்லையெனில் அது செயலிழந்த கணக்காக வகைப்படுத்தப்படும். தொடர்ந்து 10 ஆண்டுகள் பணத்தை யாரும் கோராமல் இருந்தால், அந்தத் தொகை RBI–யின் DEA Fund–க்கு மாற்றப்படும். 10 ஆண்டுகளுக்கு மேல் செயல்படாத FD–களும் இதற்கு உட்படும்.

முக்கியமாக, DEA Fund–க்கு பணம் மாற்றப்பட்டாலும் உரிமையாளர் அல்லது சட்டப்பூர்வ வாரிசு பின்னர் பணத்தைத் திரும்பப் பெறலாம். இதுவரை ரூ.17,414 கோடிக்கும் மேல் வாடிக்கையாளர்களிடம் திருப்பி வழங்கப்பட்டுள்ளது. RBI–யின் UDGAM இணையதளம் மூலம் பல வங்கிகளில் உள்ள உரிமை கோரப்படாத டெபாசிட் விவரங்களையும் தேடலாம்.




பழனி சண்முக நதியில் நேற்று ஆடி அமாவாசை என்பதால் ஏராளமான பொதுமக்கள் தர்ப்பணம் கொடுக்க வந்தனர் ஆனால் சண்முக நதி நீரில் குப்பை கூழங்கள் நிரம்பி சுத்தம் இன்றி காணப்பட்டதால் அதிர்ச்சி அடைந்தனர்.




தூத்துக்குடி கல்லூரியில் போதை பொருள் ஒழிப்பு உறுதிமொழி எடுத்தனர்.



தூத்துக்குடி மாவட்டம் கருங்குளம் ஊராட்சி ஒன்றியம் தாதன்குளம் கிராமத்தில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் சிறப்புத் திட்டங்கள் குறித்து செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வைக்கப்பட்டிருந்த புகைப்படக்கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.



# வெள்ளி அணிந்தால் அதிர்ஷ்டமா?



ஜோதிட நம்பிக்கைகளின்படி, வெள்ளி சந்திரன் மற்றும் சுக்கிரனுடன் தொடர்புடைய உலோகமாக கருதப்படுகிறது. இது மன அமைதி, உணர்ச்சி சமநிலை மற்றும் உடலுக்கு குளிர்ச்சி தரும் என நம்பப்படுகிறது.

வெள்ளி மோதிரம்: வலது அல்லது இடது கையின் சுண்டு விரலில், குறிப்பாக திங்கள் அல்லது வெள்ளிக்கிழமை அணிவது மங்களகரமானதாகக் கூறப்படுகிறது.

வெள்ளி சங்கிலி/வளையல்: பேச்சில் நிதானம், மன அமைதி மற்றும் உடல் சமநிலைக்கு உதவும் என ஜோதிடம் கூறுகிறது.

**யாருக்கு வெள்ளி உகந்ததல்ல?**

மேஷம், சிம்மம், தனுசு ஆகிய நெருப்பு தத்துவ ராசியினருக்கு வெள்ளி எதிர்பார்த்த பலனைத் தராது என ஜோதிட நம்பிக்கை கூறுகிறது.

**யாருக்கு வெள்ளி சிறப்பு?**

கடகம், விருச்சிகம், மீனம் ஆகிய நீர் தத்துவ ராசியினருக்கு வெள்ளி மிகவும் சாதகமானதாகக் கருதப்படுகிறது.

ரிஷபம், கன்னி, துலாம், மகரம், கும்பம் உள்ளிட்ட ராசியினருக்கு சராசரி பலன் கிடைக்கும் எனக் கூறப்படுகிறது.

**முக்கியம்:** வெள்ளியையும் தங்கத்தையும் ஒன்றாக அணிவதில் ஜோதிடத்தில் சில கட்டுப்பாடுகள் கூறப்படுகின்றன. இவை ஜோதிட நம்பிக்கைகள் மட்டுமே; மருத்துவ ரீதியாக நிரூபிக்கப்பட்ட தகவல்கள் அல்ல.

## சினிமா துளிகள்..!

# ‘தர்மன்’: மாஸான வீடியோவை வெளியிட்ட படக்குழு!




சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிப்பில் உருவாகி வரும் ‘தர்மன்’ திரைப்படத்தின் இரண்டாம் கட்ட படப்பிடிப்பு சென்னையில் தொடங்கியது. கமல்ஹாசனின் ராஜ் கமல் பிலிம்ஸ் இன்டர்நெஷனல் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்தை ‘ஓ மை கடவுளே’ மற்றும் ‘டிராகன்’ படங்களின் இயக்குநர் அஷ்வத் மாரிமுத்து இயக்குகிறார்.

இப்படத்தின் அடுத்தகட்ட படப்பிடிப்பு சென்னையில் தொடங்கியுள்ளதை படக்குழுவினர் புதிய வீடியோ பதிவு மூலம் அதிகாரப்பூர்வமாக உறுதி செய்துள்ளனர். அந்த வீடியோவில், இயக்குநர் அஷ்வத் மாரிமுத்து ‘ஆக்ஷன்’ எனக்கூற, ரஜினிகாந்த் தனது வழக்கமான ஸ்டைலுடனும் கம்பீரத்துடனும் நடிக்கும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. தற்போது நடைபெற்று வரும் இந்த ஷெட்யூலில் ரஜினிகாந்த் பங்கேற்கும் ஒரு பிரம்மாண்டமான பாடல் காட்சி படமாக்கப்பட்டு வருகிறது. இப்படத்தில் நடிகர் ரஜினிகாந்த் ஒரு மருத்துவர் கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

படத்தின் இரண்டாம் கட்டப் படப்பிடிப்பு சென்னையில் தொடங்கிவிட்டதை உறுதிசெய்து படக்குழுவினர் இன்று ஒரு புதிய வீடியோவை வெளியிட்டுள்ளது. வீடியோவில் நடிகர் ரஜினிகாந்த் நடிக்கும் காட்சிகள் படமாக்கப்படுவதையும் அதனை இயக்குனர் அஸ்வத் மாரிமுத்து ‘ஆக்ஷன்’ என்று சொல்வதையும் காண முடிகிறது. நடிகர் ரஜினிகாந்த் தனது தனித்துவமான கம்பீரத்தையும் ஸ்டைலையும் வெளிப்படுத்தி உள்ளார். மேலும் சென்னையில் நடைபெற்று வரும் படப்பிடிப்பில் ஒரு பாடல் காட்சி படமாக்கப்பட்டு வருகிறது.

‘தர்மன்’ படத்தில் சிம்ரன் கதாநாயகியாக நடிக்கிறார். இவர், ‘ பேட்ட ‘ படத்திற்குப் பிறகு ரஜினிகாந்துடனும், ‘பஞ்சதந்திரம்’ மற்றும் ‘பம்மல் கே சம்பந்தம்’ படங்களுக்குப் பிறகு கமல்ஹாசனுடனும் மீண்டும் இணைந்துள்ளார். ராஷி கண்ணா, யோகி பாபு உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். மிஸ்கின் மற்றும் ருக்மிணி வசந்த் ஆகியோர் இப்படத்தில் நடிப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. ஆனால் அதனை இதுவரை படக்குழு உறுதி செய்யவில்லை. படத்தின் கதை விவரங்கள் தற்போதைக்கு ரகசியமாக வைக்கப்பட்டுள்ளன.

‘தர்மன்’ படத்தின் இசையமைப்பாளராக அனிருத், ஒளிப்பதிவாளராக நிகேத் பொம்மி மற்றும் படத்தொகுப்பைக் கையாளும் பிரதீப் இ ராகவ் ஆகியோரைக் கொண்டுள்ளார். புகழ்பெற்ற சண்டைக் கலை இயக்குநர்களான அன்பரிவ் சகோதரர்கள் இப்படத்தில் இடம்பெற்றுள்ளனர்.

கடந்த ஆண்டு நவம்பரில் சுந்தர் சி இப்படத்தின் இயக்குனராக முதலில் அறிவிக்கப்பட்டார், ஆனால் அவர் திடீரென இப்படத்தில் இருந்து விலகினார். பின்னர் , ‘ஓ மை கடவுளே’ மற்றும் ‘டிராகன்’ திரைப்பட இயக்குனர் அஸ்வத் மாரிமுத்துவின் பெயர் சமூக வலைதளங்களில் வெளிப்பட்டு, தயாரிப்பாளர்களால் உறுதி செய்யப்பட்டது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்

# சிறுநீரக கற்கள் வராமல் இருக்க இதை மாற்றுங்க!



சிறுநீரக கற்கள் உருவாக முக்கிய காரணங்களில் ஒன்று போதியதண்ணீர் குடிக்காமல் இருப்பது. இதைத் தவிர்க்க அன்றாட பழக்கங்களில் சில மாற்றங்கள் அவசியம்.

போதுமான தண்ணீர் குடிக்காமல் இருப்பது

அதிக உப்பு உணவுகளை சாப்பிடுவது

ஆக்ஸலேட் அதிகம் உள்ள உணவுகளை அளவுக்கு அதிகமாக எடுத்துக்கொள்வது

சிவப்பு இறைச்சி உள்ளிட்ட அசைவ உணவுகளை அதிகமாக சாப்பிடுவது

தேவைக்கு அதிகமாக புரத சப்ளிமெண்ட்கள் எடுத்துக்கொள்வது


மருத்துவர் ஆலோசனையின்றி கால்சியம் உணவுகளை முற்றிலும் தவிர்ப்பது

அதிக சர்க்கரை மற்றும் இனிப்பு பானங்களை தொடர்ந்து குடிப்பது

கடுமையான, திடீர் எடை குறைப்பு முறைகளை பின்பற்றுவது

போதுமான நீர், குறைந்த உப்பு, சமநிலையான உணவு மற்றும் தேவையற்ற சப்ளிமெண்ட்களை தவிர்ப்பது சிறுநீரக கற்கள் உருவாகும் அபாயத்தை குறைக்க உதவும்.

# தங்கம் விலை மேலும் உயர்வு...!



சென்னை, ஆக. 13–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.160 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.1,13,760–க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.20 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.14,220–க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையில் 2–வது நாளாக மாற்றமில்லை. அதன்படி வெள்ளி ஒரு கிராம் ரூ.260–க்கும், கிலோ ரூ.2 லட்சத்து 60 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

# எழும்பூர் ரெயில் நிலையத்தில் நடைமேடை 1 முதல் 5 வரை மூடல்!



சென்னை, ஆக. 13–

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் ரூ.842 கோடியில் மறுசீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த மறுசீரமைப்பு பணியானது புதிய வருகை மற்றும் புறப்பாடு முனையங்கள், மின்தூக்கிகள், நகரும் படிக்கட்டுகள், மேம்படுத்தப்பட்ட நிலைய உள்கட்டமைப்பு மற்றும் பிற அதிநவீன வசதிகளை அமைப்பதை உள்ளடக்கியுள்ளது. இதன் ஒரு பகுதியாக தற்போது வருகை மற்றும் பார்சல் பிரிவுக்கான நடைமேம்பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. முதல் கட்டமாக நடைமேடை 1 முதல் 5 வரையில் 18 மீட்டர் அகலம், 120 மீட்டர் நீளத்துக்கு புதிய இரும்பு நடைமேம்பாலம் அமைக்கப்பட்டு வருகிறது. இதன்காரணமாக, எழும்பூரிலிருந்து புறப்பட்டு தென்மாவட்டங்களுக்குச் செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில்கள் சில தாம்பரம் நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில், நேற்று முதல் நடைமேடை 1 முதல் 5 வரையில் மூடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக, நடைமேடை 4–ல் பள்ளம் தோண்டப்பட்டு பில்லர் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து, ரெயில்வே அதிகாரிகள் கூறியபோது, 'மறுசீரமைப்பு பணி காரணமாக தற்போது நடைமேடை 1 முதல் 5–வரை உள்ள தண்டவாளங்கள் முழுமையாக மூடப்பட்டுள்ளன. எனவே, எக்ஸ்பிரஸ் ரெயில்கள் 6 முதல் 9 வரை உள்ள நடைமேடைகளில் இருந்து இயக்கப்படும். மின்சார ரெயில்கள் வழக்கம்போல நடைமேடை 10, 11–ல் இருந்து இயக்கப்படும்.

தற்போது நடைபெறும் முதல் கட்ட பணிகள் முடிவடைந்ததும், 2–ம் கட்டமாக நடைமேடைகள் 6 முதல் 8 வரையிலான பகுதிகளில் நடைமேம்பாலத்திற்கான தூண்கள் மற்றும் தாங்கு சட்டங்களை அமைப்பதற்கான பணிகள் நடைபெற இருக்கிறது. அப்போது அதற்கேற்ப ரெயில் சேவையில் மாற்றம் செய்யப்படும். 3–ம் கட்டமாக நடைமேடைகள் 9 முதல் 11 வரையில் நடைமேம்பாலம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. அந்த நேரத்தில் இரவு நேர மின்சார ரெயில்கள் ரத்து செய்யப்படும்' என்றார்.

# இந்தியாவிடம் இருந்து பெட்ரோல் வாங்கிய ரஷியா?

ரஷியா, ஆக. 13–

ரஷியாவில் இந்தியாவின் எண்ணெய் இறக்குமதி குறித்து எரிசக்தி சந்தை ஆய்வு நிறுவனமான கெப்ளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

மேற்கு ஆசியாவில் பதற்றம் நீடித்து வரும் நிலையிலும், ரஷியாவின் 'யூரல்ஸ்' வகை கச்சா எண்ணெய் போதுமான அளவில் கிடைத்து வருகிறது. இதனால் இந்திய சுத்திகரிப்பு நிறுவனங்கள் ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை அதிகரித்துள்ளன. கடந்த 29–ந் தேதி வரையிலான கணக்கின்படி, இந்தியா தினமும் 27.80 லட்சம் பீப்பாய் ரஷிய கச்சா எண்ணெயை இறக்குமதி செய்துள்ளது. ஜூன் மாதத்தில் இது 27.30 லட்சம் பீப்பாயாக இருந்தது. இதன்படி ரஷிய கச்சா எண்ணெய் இறக்குமதி 1.8 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்தியாவின் மொத்த கச்சா எண்ணெய் இறக்குமதி



தினமும் 50.30 லட்சம் பீப்பாயாக இருந்த நிலையில், அதில் ரஷியாவின் பங்கு 55.3 சதவீதமாக உயர்ந்துள்ளது. ரஷியாவில் கச்சா எண்ணெய் கிடைத்தாலும், அதை பெட்ரோல், டீசலாக மாற்றும் சுத்திகரிப்பு நிலையங்கள் மீது உக்ரைன் தொடர்ந்து டிரோன் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதனால் ரஷியாவின் எண்ணெய் சுத்திகரிப்பு அளவு குறைந்துள்ளது. ஜூலை மாதத்தில் ரஷியாவின் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு அளவு தினமும் சுமார் 36 லட்சம் பீப்பாயாக குறைந்தது. வழக்கமான அளவுடன் ஒப்பிடுகையில் இது சுமார் மூன்றில் ஒரு பங்கு குறைவாகும். இதன் காரணமாக ரஷியாவில் பெட்ரோல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து உள்நாட்டு தேவையை சமாளிப்பதற்காக பெட்ரோல், டீசல் ஏற்றுமதிக்கு ரஷியா கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. மேலும், தேவையை பூர்த்தி செய்ய பிற நாடுகளில் இருந்து பெட்ரோலை வாங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாகவே இந்தியாவில் இருந்து ரஷியாவுக்கு பெட்ரோல் அனுப்பப்பட்டுள்ளது. இந்தியாவின் குஜராத் மாநிலம் வதினார் பகுதியில் உள்ள நயாரா எனர்ஜி நிறுவனத்தில் இருந்து முதல் சரக்கு அனுப்பப்பட்டது.

இந்த நிறுவனத்தில் ரஷியாவின் முன்னணி எண்ணெய் நிறுவனமான ரோஸ் நெப்ட்டுக்கு முக்கிய பங்கு உள்ளது.முதல் சரக்கு கடந்த 5–ந் தேதி ரஷியாவை சென்றடைந்தது. மேலும் சில பெட்ரோல் சரக்குகள் இந்தியாவில் இருந்து ரஷியாவுக்கு செல்லும் நிலையில் உள்ளன. இதற்கிடையே, இந்தியாவுக்கு வரும் ரஷிய கச்சா எண்ணெயின் விலை நிலவரத்திலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. முன்பு ஒரு பீப்பாய்க்கு 8 முதல் 10 டாலர் வரை வழங்கப்பட்ட தள்ளுபடி தற்போது 2 முதல் 3 டாலராக குறைந்துள்ளது. இதனால் ரஷிய கச்சா எண்ணெயின் விலை சர்வதேச 'பிரெண்ட்' கச்சா எண்ணெய் விலைக்கு நெருக்கமாக உயர்ந்துள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 'நாட் ரீச்சபிள்' செந்தில் பாலாஜி?

சென்னை, ஆக. 13–

தி.மு.க., தலைமைக்கும் செந்தில் பாலாஜிக்கும் இடையே விரிசல் விழுந்திருப்பதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து, தி.மு.க., வட்டாரங்கள் கூறியதாவது: தி.மு.க., வரலாற்றில் எந்த ஒரு சீனியர் நிர்வாகிக்கும் எதிராக, இவ்வளவு வழக்குகள் இல்லை. அதனால் தான் தி.மு.க., ஆட்சியில், இலாகா இல்லாத அமைச்சராக செந்தில் பாலாஜியை தனது அமைச்சரவையில் தொடர வைத்தார், முன்னாள் முதல்வர் ஸ்டாலின். கட்சிக்குள் யாருக்குமே இல்லாத அதிக முக்கியத்துவமும் அளித்தார்.




செந்தில் பாலாஜியை மையமாக வைத்து தான் த.வெ.க., தனது தேர்தல் பிரசாரத்தையே வடிவமைத்தது. எனவே தான், கரூர் சம்பவம் மொத்தமாக தி.மு.க., தலையில் விழுந்தது. செந்தில் பாலாஜியால், கட்சியிலும் ஆட்சியிலும் ஏற்பட்ட பாதிப்புகளை, தி.மு.க., தற்போதும் சந்தித்து வருகிறது. தேர்தல் தோல்விக்கான காரணங்களை ஆராய்ந்தபோது, செந்தில் பாலாஜி மீதான விவகாரங்கள் தலைமைக்கு தெரிந்தன. சீனியர்கள் கூறும் தொடர் புகார்களால், செந்தில் பாலாஜி மீதான மதிப்பு தி.மு.க., தலைமையிடம் சரிந்துள்ளது.

அதே நேரத்தில், அடுத்தடுத்து அணிவகுக்கும் வழக்குகள், செந்தில் பாலாஜியின் கழுத்தை நெரிக்க தொடங்கி உள்ளன. கடைசியாக அவர் மீது பதிவான, த.வெ.க., – எம்.எல்.ஏ.,க்களிடம் குதிரைபேரம் வழக்கை, தி.மு.க., கண்டுகொள்ளவில்லை.

இதனால், தன்னை பாதுகாக்க இனி தி.மு.க., உதவாது என செந்தில் பாலாஜியும், அவரது தம்பி அசோக்கும் நினைக்கின்றனர். அதன்படி, மத்திய விசாரணை அமைப்புகளில் உள்ள வழக்குகளை தீர்க்க, நேரடியாக டில்லி தலைவர்களிடம் நெருக்கம் காட்டுகின்றனர்.

தி.மு.க., தலைமையில் இருந்து வரும் அழைப்புகளை, ஏதாவது காரணம் சொல்லி தட்டி கழிக்கிறார் செந்தில் பாலாஜி. சென்னையில் இருந்தாலும், ஸ்டாலின், உதயநிதியை சந்திப்பதை முடிந்த அளவு தவிர்க்கிறார். சட்டசபையிலும், தி.மு.க., சீனியர்களிடம் பெரிதாக பேசுவதில்லை. பாதி நாட்களுக்கும் மேல் தொடர்பு எல்லைக்கு அப்பால் தான் உள்ளார். செந்தில் பாலாஜியின் இந்த அணுகுமுறையால், அவரது திட்டம் என்ன என தெளிவாக தெரியாமல், தி.மு.க., தலைமை குழப்பத்தில் உள்ளது. இவ்வாறு அந்த வட்டாரங்கள் கூறின.

# இந்தியா - வங்கதேச எல்லையில் பாக். உளவாளி அதிரடி கைது!

இந்தியா – வங்கதேசம் எல்லைப் பகுதிக்கு அருகே, பாகிஸ்தான் நாட்டவர் என சந்தேகிக்கப்படும் ஒருவர் உட்பட இரண்டு பேரை மேற்கு வங்க சிறப்பு அதிரடிப்படை கைது செய்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



பாகிஸ்தானின் பைசலாபாத்தை சேர்ந்த ராணா ரவூஃப் என்ற வஹாப் ஆலம், வடக்கு 24 பர்கானாஸ் மாவட்டத்தின் ஹப்ரா பகுதியில் செவ்வாய்க்கிழமை இரவு கைது செய்யப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர். கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், பங்காவோன் அருகே உள்ள ஹப்ரா பகுதியில் சிறப்பு அதிரடிப்படை வீரர்கள் தேடுதல் வேட்டை நடத்தி ரவூஃபை கைது செய்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

ரவூஃபிற்கு பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.–யுடன் தொடர்பு இருப்பதாக புலனாய்வாளர்கள் சந்தேகிக்கின்றனர் என்றும், இந்தியாவில் அவரது செயல்பாடுகள், தொடர்புகள் மற்றும் நடமாட்டங்களை விசாரித்து வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொல்கத்தாவின் டாப்சியாவில் செவ்வாயன்று கைது செய்யப்பட்ட முகமது எஜாஸ் என அடையாளம் காணப்பட்ட மற்றொரு நபருக்கு, ரவூஃபுடன் நேரடித் தொடர்பு இருந்ததாகவும், அவர் இந்திய அடையாள அட்டைகளைப் பெற உதவியதாகவும் கூறப்படுகிறது என அவர்கள் தெரிவித்தனர், ஆனால் அவரது அடையாளத்தை வெளியிடவில்லை.

"போங்கான் எல்லையை நோக்கி ரவூஃப் நகர்வது குறித்த குறிப்பிட்ட தகவல் எங்களுக்குக் கிடைத்தது. அதனையடுத்து, ஹப்ரா பகுதியில் உள்ள ஜெஸ்ஸோர் சாலையில் அவரை கைது செய்தோம். ஐ.எஸ்.ஐ.–யுடன் அவருக்கு உள்ளதாகக் கூறப்படும் தொடர்புகள், அவர் இந்திய அடையாள ஆவணங்களை பயன்படுத்தியது, மற்றும் அவர் வங்கதேசத்திற்குள் நுழைய முயன்றாரா என்பது குறித்து நாங்கள் விசாரித்து வருகிறோம்.

இந்தியாவுக்குள் நுழைவதற்கு முன்பு அவர் சிறிது காலம் நேபாளத்தில் தங்கியிருந்தார், பின்னர் மேற்கு வங்கத்தில் குடியேறினார். அவரிடமிருந்து பல இந்திய அடையாள அட்டைகள் மீட்கப்பட்டன. அவரிடமிருந்து கண்டெடுக்கப்பட்ட ஆதார் அட்டையில் டாப்சியா முகவரி இருந்தது," என்று சிறப்பு அதிரடிப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புலனாய்வாளர்களின் கூற்றுப்படி, ரவூஃப் 2012–இல் நேபாளம் வழியாக சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்தார்.

ரவூஃப், நாட்டில் உள்ள பல்வேறு ரயில்கள் மற்றும் ஆயுதப் படைகளின் நடமாட்டங்களைக் கண்காணித்து வந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். முக்கியத்துவம் வாய்ந்த வில்லியம் கோட்டை உட்பட, கொல்கத்தாவில் உள்ள முக்கிய இடங்களை ரவூஃப் கண்காணித்து வந்ததை சிறப்பு அதிரடிப்படை அதிகாரிகள் கண்டறிந்தனர்.

ராணா தனது கைபேசியை அழித்துவிட்டதாகவும், அவர் கைது செய்யப்பட்டபோது அவரிடமிருந்து எந்த மின்னணு சாதனமும் மீட்கப்படவில்லை என்றும் அந்த அதிகாரி கூறினார்.

# மராத்தி தெரியாவிட்டால் ஆட்டோ டிரைவர்களுக்கு லைசன்ஸ் கிடையாது!

மும்பை, ஆக. 13–

மராத்தி மொழி தெரியாத ஆட்டோ, டாக்சி மற்றும் செயலி மூலம் இயக்கப்படும் வாடகை கார் டிரைவர்களுக்கு அதிர்ச்சி அளிக்கும் வகையில் மகாராஷ்டிர அரசு புதிய விதிமுறையை அமல்படுத்த உள்ளது.

இதுகுறித்து மாநில போக்குவரத்து அமைச்சர் பிரதாப் சர்நாயக் கூறுகையில், பயணிகளுடன் முறையாக தொடர்பு கொள்ளவும், அவர்களின் பிரச்சினைகளை புரிந்து கொள்ளவும், பாதுகாப்பான மற்றும் வசதியான பயணத்தை உறுதி செய்யவும் உள்ளூர் மொழி அறிவு அவசியம். மராத்தி மொழி



தெரியாத சில டிரைவர்கள் ஏற்கனவே நடைமுறையில் இருந்த விதிமுறைகளில் காணப்பட்ட குழப்பங்களை பயன்படுத்தி அதில் இருந்து தப்பித்து வந்ததாக போக்குவரத்து துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தற்போது விதிகளில் செய்யப்பட்டுள்ள திருத்தத்தின் மூலம் இதுபோன்ற பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்" என்றார்.

மராத்தி மொழி தெரிந்திருக்க வேண்டும் என்ற விதிமுறையை பின்பற்றாத டிரைவர்களுக்கு எதிராக வருகிற 18–ந் தேதி முதல் மாநிலம் முழுவதும் வட்டார போக்குவரத்து அலுவலகங்கள் மூலம் சோதனைகள் நடத்தப்பட உள்ளன. விதிமுறையை மீறுவது உறுதி செய்யப்பட்டால், அதற்கான காரணங்களை பதிவு செய்து ஓட்டுனர் உரிமம் மீது நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, மும்பையில் உள்ள தாராவி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மராத்தி மொழித் தேர்வு எழுதுவதற்காக ஏராளமான ஆட்டோ மற்றும் டாக்சி டிரைவர்கள் குவிந்தனர்.

# வேலை வாய்ப்பு

## TNPSC குரூப் 2, 2A தேர்வு 2026

## 821 காலிப்பணியிடங்கள்!




தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) சார்பில் குரூப் 2 மற்றும் 2A பணிகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு II அறிவிப்பு வெளியாகியுள்ளது.

மொத்த காலியிடங்கள்: 821

அறிவிப்பு எண்: 07/2026

அறிவிப்பு தேதி: 11.08.2026

விண்ணப்ப தொடக்கம்: 11.08.2026

விண்ணப்பிக்க கடைசி நாள்: 09.09.2026

பணியிடம்: தமிழ்நாடு

விண்ணப்ப முறை: ஆன்லைன் –https://tnpsc.gov.in/

தேர்வாணைய இணையதளம்: TNPSC அதிகாரப்பூர்வ இணையதளம்

விண்ணப்பிக்கும் முன்: கல்வித்தகுதி, வயது வரம்பு, தேர்வு முறை, கட்டணம் உள்ளிட்ட முழு விவரங்களை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் சரிபார்க்கவும்.

# தனியார் பிராண்ட் பெயரில் தேஜஸ் எக்ஸ்பிரஸ் ரயில் சேவை!



புதுடில்லி, ஆக. 13–

இந்தியாவின் முதல் தனியார் பிராண்ட் பெயரில் ரயில் இயக்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. 'ஸ்ப்ரைட்' தேஜஸ் எக்ஸ்பிரஸ் (Sprite Tejas Express) என்ற பெயரில் தனியார் சேவை இயங்க உள்ளது. இந்த ரயில் லக்னோ மற்றும் டில்லி இடையே இயக்கப்பட உள்ளது.

கோகோ கோலா நிறுவனம் தேஜஸ் எக்ஸ்பிரஸ் ரயிலுக்கான விளம்பர பிராண்டிங் உரிமையைப் பெற்றுள்ளது. இதன்படி, 5 எல்.எச்.பி பெட்டிகள் ஸ்ப்ரைட் விளம்பர வடிவமைப்புடன் இயக்கப்படுகின்றன. 6 மாத காலத்திற்கு விளம்பர உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

ஸ்பிரைட் நிறுவனத்திற்கு ஐஆர்சிடிசி அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து, இந்த ரயிலை 'ஸ்பிரைட் தேஜஸ் எக்ஸ்பிரஸ் என்று அறிவிக்குமாறு வடகிழக்கு ரயில்வேக்கு அறிவுறுத்தப்பட்டதாக ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்தன.

பயணத்தின் இரு திசைகளிலும், ரயில் புறப்படும் மற்றும் வழியில் உள்ள நிலையங்களில் இந்த ரயில் 'ஸ்பிரைட்' தேஜஸ் எக்ஸ்பிரஸ் என்று அறிவிக்கப்படும். தேஜஸ் எக்ஸ்பிரஸ் முழுமையாக குளிர்சாதன வசதி கொண்ட அதிவேக ரயில், நவீன வசதிகளுடன் கூடியது. பயணத்தின்போது உணவு வகைகள் மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் ஆகியவை சிறப்பாக உள்ளன என்று ஐஆர்சிடிசிதெரிவித்துள்ளது.

'ஒரு பிராண்டின் பெயரில் ரயில் ஒன்று அழைக்கப்படுவது இதுவே முதல் முறையாகும். லக்னோ– டில்லி தேஜஸ் எக்ஸ்பிரஸ் ஒரு தனியார் ரயிலாக இருந்தாலும், தண்டவாளங்கள் மற்றும் ரயில் நிலையங்கள் போன்ற உள்கட்டமைப்பைப் பயன்படுத்துவதற்கான கட்டணங்களை இந்திய ரயில்வேக்குச் செலுத்துகிறது,' என்று ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்தன.'1

# தமிழக - கர்நாடக எல்லையில் பலத்த பாதுகாப்பு!



ஒசூர், ஆக. 13–

தமிழ்நாட்டிற்கு நீர் திறக்க கூடாது என வலியுறுத்தி கர்நாடகாவில் இன்று முழு அடைப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது .மேகதாது அணை கட்ட வலியுறுத்தி கன்னட அமைப்புகள் பந்த் அறிவிப்பால் எல்லையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. தமிழகத்திலிருந்து கர்நாடகா செல்லும் பேருந்துகள் அனைத்தும் வழக்கம்போல் இயங்குகின்றன.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882


மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்

## ஹார்முஸ் மீது அமெரிக்கா உரிமை கோரல் – ஈரான் கடும் மறுப்பு!




# டெல்லியில் சுதந்திர தின விழா பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்: 20 ஆயிரம் போலீசார் குவிப்பு!

புதுடெல்லி, ஆக. 13–

80–வது சுதந்திர தின விழா நாடு முழுவதும் நாளை மறுநாள் (15–ந்தேதி) கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. சுதந்திர தின விழாவையொட்டி டெல்லி செங்கோட்டையில் பிரதமர் நரேந்திர மோடி தேசிய கொடியேற்றி நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார். மேலும் ''வந்தே மாதரம்'' பாடலின் 150–வது ஆண்டை கொண்டாடும் வகையில் முதல்முறையாக சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. டெல்லி நகரம் முழுவதும் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீசார் மற்றும் பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டு பலத்த பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

சுதந்திர தின கொண்டாட்டங்களின் போது ஏதேனும் அசம்பாவிதங்கள் நிகழ்வதை தடுக்க, டெல்லி போலீசார் ரோந்து பணிகள், வாகன சோதனைகள் மற்றும் கண்காணிப்பை தீவிரப்படுத்தி உள்ளனர். முக்கிய இடங்களில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பல இடங்களில் கூடுதல் சோதனைச்சாவடி கள் மற்றும் கண்காணிப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சந்தேகத்திற்குரிய நபர்கள் மற்றும் வாகனங்களை கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குற்ற பின்னணி கொண்டவர்கள் மீது கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. பாதுகாப்பை உறுதி செய்வதிலும் போலீசார் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்.

இதுகுறித்து டெல்லி போலீஸ் உயர் அதிகாரிகள் கூறியதாவது:–

சுதந்திர தின விழாவையொட்டி டெல்லியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து நிலையில் உள்ள போலீஸ் அதிகாரிகளும் களத்தில் பணியில் ஈடுபட்டுள்ளனர். தெற்கு டெல்லியின் பல்வேறு இடங்களில் சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. சந்தேகத்திற்குரிய நபர்கள் மற்றும் வாகனங்களை கண்டறிய சோதனைகள் நடத்தப்பட்டு வருகிறது. சுதந்திர தின விழா நடைபெறும் பகுதியில் சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அப்பகுதியில்




பெண் போலீசார் உட்பட 1,600–க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். எல்லை பகுதிகள், முக்கிய சந்திப்புகள் மற்றும் பிற இடங்களில் சுமார் 60 சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

முக்கிய சோதனைச் சாவடிகளில் போக்குவரத்து போலீசார், ரோந்து போலீசார் மற்றும் உள்ளூர் போலீசார் இணைந்து ஒருங்கிணைந்த சோதனைகளை மேற்கொண்டு வருகிறார்கள். போலீசார் வாகனங்களை சோதனை செய்வதோடு, வாகன நிறுத்தும் இடங்களிலும் சோதனைகளை நடத்தி வருகின்றனர்.

குற்ற பின்னணி கொண்டவர்கள் மற்றும் சமூக விரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது அதிக கவனம் செலுத்தப்படுகிறது. அவர்களை கண்காணித்து வருகிறோம். அதேபோல் ஏராளமான வாகனங்களையும் வாகன நிறுத்தும் இடங்களையும் ஆய்வு செய்கிறோம்.

மூத்த போலீஸ் அதிகாரிகள் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு ஆய்வு மேற்கொள்கிறார்கள். போலீஸ் நிலையங்களில் உள்ள பொறுப்பு அதிகாரிகள் மற்றும் மூத்த அதிகாரிகள் தங்கள் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ரோந்து மற்றும் ஆய்வுகளை மேற்கொள்கிறார்கள். சோதனைச் சாவடிகளில் சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பல அடுக்கு பாதுகாப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.

கிழக்கு டெல்லியில், சுதந்திர தின பாதுகாப்பு ஏற்பாடுகளின் ஒரு பகுதியாக அனைத்து போலீஸ் அதிகாரிகளும், போலீசாரும் களத்தில் உள்ளனர். அங்கு தீவிர சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சமூக விரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.


பொதுமக்கள் பெருமளவில் கூடும் இடங்கள் மற்றும் அதிக நடமாட்டம் கொண்ட பகுதிகளில் வான்வழி கண்காணிப்பை மேற்கொள்ள போலீசார் டிரோன்களை பயன்படுத்தி வருகின்றனர். சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் வகையில், தரை வழி கண்காணிப்பு மற்றும் சோதனைகள் அதிகரிக்கப்பட்டு உள்ளன. எல்லை பகுதிகள் மற்றும் நகருக்குள் நுழையும் மற்றும் வெளியேறும் முக்கிய பாதைகளும் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன. டெல்லி முழுவதும் சுதந்திர தின கொண்டாட்டங்கள் அமைதியாக நடைபெறுவதை உறுதிசெய்ய, தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள், வழக்கமான ரோந்து பணிகள் மற்றும் சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகள் மீதான விரைவான நடவடிக்கை ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படுகிறது.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

# செல்போனில் வரும் தேவையற்ற அழைப்புகளுக்கு ஏ.ஐ. மூலம் மத்திய அரசு நடவடிக்கை!

புதுடெல்லி, ஆக. 13–

செல்போனில் தொடர்ந்து வரும் தேவையற்ற விளம்பர அழைப்புகள், குறுந்தகவல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் மத்திய அரசு செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) மூலம் கண்காணிப்பை தீவிரப்படுத்தி உள்ளது. இந்த தேவையற்ற தகவல்களை அனுப்புபவர்களை ஏ.ஐ. மூலம் கண்டறிந்து, தொடர்ந்து விதிமீறலில் ஈடுபட்டால் அவர்களின் தொலைத் தொடர்பு சேவைகளை துண்டிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.




இதுதொடர்பாக நாடாளுமன்ற மக்களவையில் கேட்கப்பட்ட கேள்விக்கு மத்திய தகவல் தொடர்புத்துறை இணை மந்திரி டாக்டர் பெம்மசானி சந்திரசேகர் அளித்த பதிலில் கூறியிருப்பதாவது:–

பார்தி ஏர்டெல், ரிலையன்ஸ் ஜியோ, வோடபோன் ஐடியா, பி.எஸ்.என்.எல். ஆகிய 4 நிறுவனங்களும் ஏ.ஐ. அடிப்படையிலான ஸ்பேம் கண்டறியும் அமைப்புகளை செயல்படுத்தி உள்ளன. இந்த தொழில்நுட்பம் மூலம் தேவையற்ற விளம்பர அழைப்புகள் மற்றும் குறுந்தகவல்கள் கண்டறியப்பட்டு, சந்தேகத்துக்குரிய தகவல்களை அனுப்புபவர்கள் அடையாளம் காணப்படுகிறார்கள்.

ஏ.ஐ. மூலம் ஒரு தகவல் ஸ்பேம் என்று அடையாளப்படுத்தப்படுவது மட்டுமே இறுதி முடிவாக கருதப்படாது. அதன்பிறகு சம்பந்தப்பட்ட தொலைத்தொடர்பு நிறுவனம் விசாரணை நடத்த வேண்டும். ஒரே நபருடன் தொடர்புடைய 5 அல்லது அதற்கு மேற்பட்ட தொலைபேசி எண்கள் 10 நாட்களுக்குள் சந்தேகத்துக்குரிய ஸ்பேம் தகவல்களை அனுப்பியது கண்டறியப்பட்டால், அந்த நபரின் வாடிக்கையாளர் விவரங்கள் (கே.ஒய்.சி.) மீண்டும் சரிபார்க்கப்படும்.

ஸ்பேம் தகவல்களை அனுப்புவதற்காக தொலைத்தொடர்பு வசதிகள் பயன்படுத்தப்பட்டது உறுதி செய்யப்பட்டால், சம்பந் தப்பட்ட தொலைபேசி எண்கள் மற்றும் பிற தொலைத்தொடர்பு வசதிகளின் அவுட்கோயிங் வசதி துண்டிக்கப்படும். அந்த நபர் கருப்புப் பட்டியலிலும் சேர்க்கப்படுவார்.

ஸ்பேம் தகவல்களை அனுப்புவதாக அதிக அளவில் சந்தேகிக்கப்படும் நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு தொலைத்தொடர்பு நிறுவனங்கள் எச்சரிக்கை தகவல்களையும் அனுப்பி வருகின்றன. இந்த நடவடிக்கை கடந்த ஜூன் 23–ந் தேதி தொடங்கிய நிலையில், முதல் ஒரு வாரத்தில் மட்டும் 2 லட்சத்து 43 ஆயிரத்துக்கும் அதிகமான எச்சரிக்கை தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அதிமுக அதிருப்தி எம்எல்ஏக்கள்! முக்கிய முடிவு?

சென்னை, ஆக. 13–

அதிமுக அதிருப்தி எம்எல்ஏக்கள் சி.வி. சண்முகம், எஸ்.பி.வேலுமணி ஆகியோர் நேற்று இரவு சுமார் 5 மணி நேரமாக ஆலோசனை நடத்தியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வி காரணமாக, அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக எஸ்.பி. வேலுமணி தரப்பு எம்எல்ஏக்கள் பிரிந்து, சட்டப்பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பில் தவெகவுக்கு ஆதரவு அளித்ததைத் தொடர்ந்து அதிமுகவில் இபிஎஸ் அணி, எஸ்.பி. வேலுமணி அணி என இரண்டாகப் பிரிந்தது. பின்னர் இரு அணிகளும் இணைந்தன.

இதில் சி. விஜயபாஸ்கர், எம்.ஆர். விஜயபாஸ்கர் உள்ளிட்ட முன்னாள் அமைச்சர்கள் பலர் தவெகவில் இணைந்தனர்.

அதிமுக தோல்விக்கான காரணத்தை ஆராய வேண்டும் என்று சி.வி. சண்முகம், எஸ்.பி. வேலுமணி ஆகியோர் கூறிவருகின்றனர்.

பழைய பொறுப்புகளை மீண்டும் வழங்க வேண்டும் என |இபிஎஸ்ஸுக்கு எஸ்.பி. வேலுமணி தரப்பினர் 2 முறை கடிதம் எழுதியும் இபிஎஸ் எந்த பதிலும் தரவில்லை.

சென்னை பாலவாக்கத்தில் உள்ள சி.வி. சண்முகம் இல்லத்தில் எஸ்.பி. வேலுமணி, நத்தம் விஸ்வநாதன், கே.பி. அன்பழகன் உள்ளிட்டோர் நேற்று (ஆக. 12, புதன்) இரவு ஆலோசனை மேற்கொண்டனர். சுமார் 5 மணி நேரம் இந்த ஆலோசனை நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. இந்த கூட்டத்தில் அதிமுக அதிருப்தி எம்எல்ஏக்கள் முக்கிய முடிவு எடுத்திருக்க லாம் என்றும் சொல்லப்படுகிறது.

# தமிழ்நாட்டில் எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். படிப்பு கலந்தாய்வு தொடக்கம்!

சென்னை, ஆக. 13–

தமிழ்நாட்டில் எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். படிப்புகளில் சேர்வதற்கான கலந்தாய்வு தொடங்கியது. முதற்கட்டமாக சிறப்புப் பிரிவினருக்கும், விளையாட்டு பிரிவு மாணவர்கள், முன்னாள் ராணுவ வீரர்களின் வாரிசுகள், மாற்றுத்திறனாளிகளுக்கு இன்று கலந்தாய்வு நடைபெறுகிறது. எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். மருத்துவ படிப்புகளில் சேர 72,633 பேர் விண்ணப்பித்துள்ளனர்



இன்று காலை 8 மணி முதல் நேரடி முறையில் கலந்தாய்வு நடைபெறுகிறது. தொடர்ந்து நண்பகல் 12 மணி முதல் ஆகஸ்ட் 19 ஆம் தேதி தேதி மாலை 5 மணி வரை பொதுப் பிரிவில் அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கும், நிர்வாக ஒதுக்கீட்டில் விரும்பும் இடங்களை பதிவு செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான தற்காலிக ஒதுக்கீடு 20 ஆம் தேதியும், அதனை உறுதி செய்த பின்னர் 21 ஆம் தேதி இறுதி ஒதுக்கீடும் அளிக்கப்படும். ஆகஸ்ட் 22ம் தேதி முதல் 28ம் தேதிக்குள் ஒதுக்கீட்டு ஆணைகளை பதவிறக்கம் செய்து கொள்ளும் மாணவர்கள், ஆகஸ்ட் 23 ஆம் தேதி முதல் 28ம் தேதி மாலை 5 மணிக்குள் கல்லூரிகளில் சேர வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம் சார்பில் 2026 – 2027 ஆம் ஆண்டின் மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் படிப்புகளில் சேர்வதற்கான 72,633 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இதில் உள்ள 7.5 சதவீதம் அரசு பள்ளி மாணவர்களின் உள்ஒதுக்கீட்டுக்கு 4,860 விண்ணப்பங்களும், விளையாட்டுப் பிரிவுக்கு 468 விண்ணப்பங்களும், முன்னாள் ராணுவத்தினர் வாரிசுகளுக்கான பிரிவு ஒதுக்கீட்டிற்கு 524 விண்ணப்பங்களும், மாற்றுத்திறனாளிகள் ஒதுக்கீட்டு பிரிவுக்கு 212 விண்ணப்பங்களும் பெறப்பட்டன.


இந்நிலையில், சென்னை ஓமந்தூரார் அரசு பண்நோக்கு மருத்துவமனை வளாகத்தில் இன்று காலை 8 மணிக்கு விளையாட்டு பிரிவு மாணவர்களுக்கான தரவரிசை எண் 1–25 வரை இடம்பெற்றுள்ளவர்களுக்கு கலந்தாய்வு தொடங்கி உள்ளது. காலை 8:30 மணிக்கு முன்னாள் ராணுவத்தினர் குடும்பங்களை சேர்ந்த வரிசை எண் 1 முதல் 30 வரையான மாணவர்களுக்கும், 9 மணிக்கு தகுதி வாய்ந்த அனைத்து மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான கலந்தாய்வு தொடங்கியது.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு எம்.பி.பி.எஸ். படிப்பில் சேர 537 இடங்கள் உள்ளன. இதில் அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள இடங்கள் 335. சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் உள்ள அரசு ஒதுக்கீட்டு இடங்கள் 202 ஆக உள்ளன. அரசு பல் மருத்துவக் கல்லூரிகள் மற்றும் அரசு ஒதுக்கீட்டில் உள்ள சுயநிதி பல் மருத்துவக் கல்லூரிகளில் பி.டி.எஸ். இடங்கள் 104. இதில் அரசு பல் மருத்துவக் கல்லூரிகளில் 16 இடங்களும், சுயநிதி பல் மருத்துவக் கல்லூரிகளில் 88 இடங்களும் உள்ளன.

# மன அழுத்தத்தால் வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கரோலின் லீவிட் திடீர் விலகல்!

வாஷிங்டன், ஆக. 13–

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் நிர்வாகத்தில் வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளராகப் பணியாற்றி வந்த கரோலின் லீவிட், தனது பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். மிகக் குறைந்த வயதில் இந்தப் பொறுப்பை ஏற்ற நபர் என்ற பெருமையைப் பெற்ற இவர், தனது குடும்பத்துடனும் குழந்தைகளுடனும் கூடுதல் நேரத்தைச் செலவிடுவத ற்காகவே இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.




இருப்பினும், கடுமையான பணிச்சுமை, தூக்கமின்மை மற்றும் கடுமையான மன அழுத்தம் ஆகியவையே இவரின் இந்தத் திடீர் விலகலுக்கு முக்கியக் காரணமாக இருந்ததாகக் கூறப்படுகிறது. இரண்டாவது குழந்தை பிறந்த இரண்டே மாதங்களில் மீண்டும் பணிக்குத் திரும்பிய லீவிட், பிரசவ விடுப்பில் இருந்தபோதே பணியிலிருந்து விலகுவது குறித்து யோசித்து வந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால், அதிபர் டொனால்ட் டிரம்ப் தொடர்ந்து அவரைத் தொடர்புகொண்டு பணிக்குத் திரும்புமாறு கேட்டுக்கொண்டதால் அவர் மீண்டும் பணியில் இணைந்தார். ஜூலை மாதம் மீண்டும் பொறுப்பேற்ற பிறகு, பணிக்கும் குடும்பப் பொறுப்புகளுக்கும் இடையே தீவிரப் போராட்டத்தைச் சந்தித்த இவர், கடுமையான பணி அழுத்தத்தைச் சமாளிக்க முடியாமல் விலக முடிவெடுத்தார்.

டிரம்பிற்கு லீவிட் மீது மிகுந்த நம்பிக்கையும் மதிப்பும் இருந்ததால், அவரைத் பதவியில் தொடருமாறு பலமுறை வலியுறுத்தினார். செய்தித் தொடர்பாளர் பதவியிலிருந்து விலகினாலும், வரவிருக்கும் இடைத்தேர்தல் பணிகளிலும், குடியரசுக் கட்சியின் முக்கிய வெளியுறவு ஆலோசகராகவும் லீவிட் தொடர்வார் என்று டிரம்ப் தனது சமூக வலைதளப் பதிவில் அறிவித்துள்ளார்.

லீவிட்டின் முடிவை மதிப்பதாகத் தெரிவித்துள்ள அதிபர் டிரம்ப், "கரோலின் வெள்ளை மாளிகையில் ஒரு சிறந்த தலைவராகச் செயல்பட்டு, நீதிக்காகவும் சுதந்திரத்திற்காகவும் மிகச் சிறப்பாகப் போராடியுள்ளார்" என்று பாராட்டினார். செய்தித் தொடர்பாளர் பதவியிலிருந்து லீவிட் விலகினாலும், வரவிருக்கும் இடைத்தேர்தல் பணிகளிலும், குடியரசுக் கட்சியின் வெளியுறவு மற்றும் ஊடகப் பிரிவின் முதன்மை ஆலோசகராகவும் அவர் தொடர்ந்து செயல்படுவார் என்று டிரம்ப் உறுதிப்படுத்தியுள்ளார்.

# ஆன்லைன் மூலம் மதுபானம் முன்பதிவு! சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு!

சென்னை, ஆக. 13–

ஆன்லைன் மூலமாக மதுபானம் முன்பதிவு செய்வதற்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் பொது நல வழக்கு தொடரப்பட்டுள்ளது. வழக்கறிஞர் பாலு என்பவர் தனது மனுவில் "அரசியலமைப்பு சட்டத்திற்கு முரணாக தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. மது குடிப்பவர்களுக்கு வசதி செய்து கொடுத்தால் தமிழ்நாட்டில் மிகப்பெரிய தீங்கு ஏற்படும். ரேஷன் கடைகளில் ஆன்லைனில் முன்பதிவு செய்ய எந்த வசதியும் இல்லை. மக்கள் வரிசையில் நிற்கிறார்கள். அதேபோல மருத்துவமனைகளிலும் மக்கள் வரிசையில் நிற்கிறார்கள்.




ஆனால் மதுபானத்திற்கு வீட்டிலிருந்தே முன்பதிவு செய்து பெறலாம் என்ற நடைமுறை சரியல்ல. பெரியவர்கள் முன்பதிவு செய்யும் முகவரி மூலமாக சிறுவர்களும் முன்பதிவு செய்து யார் மூலமாகவும் வாங்க வாய்ப்புள்ளது.

எனவே, ஆன்லைனில் மது முன்பதிவு செய்வதற்கான அரசாணையை ரத்து செய்ய வேண்டும். வழக்கில் தீர்வு காணும் வரை இந்த நடைமுறைக்கு தடை விதிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020